மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, அந்தத் திருக்கோயிலில் விரும்பிய நபர்களும், சேவார்த்திகளும் திருமணங்களை நடத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று, அனுமதிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

210—

மாணவர் விடுதி

***5137—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு அரசு கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு அரசு கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை, மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்.

2018 ஜூன் 25]

மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு அரசு கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "என்னை நம்புகிற மக்களுக்கு, என்னென்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய முடியுமோ, அந்த வழிகளைப் பின்பற்றி, நான் சதா சர்வகாலமும் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்" என மக்கள் நலனைப் பற்றி சிந்தித்து, நல்லாட்சி நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) நம்மை விட்டுப் பிரிந்தாலும், நம் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2014 ஆம் ஆண்டு, சட்டமன்றப் பேரவையில், விதி 110–ன்கீழ் மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்கப்படும் என இப்பேரவையில் அறிவித்து, செயல்படுத்திக் காட்டினார்கள். அக்கல்லூரி மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட கல்லூரியாகும். இக்கல்லூரியில் சுமார் 1,000–க்கும் மேற்பட்ட ஏழையெளிய மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். வெளியூர்களிலிருந்து வரும் மாணவர்கள், இங்கு தங்கி கல்வி பயில விடுதி இல்லாத காரணத்தினால், பெரிதும் சிரமத்திற்கு ஆளாகின்றார்கள்.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளையும், அரசுக் கல்லூரிகளாக மாற்றி, சாதனை படைத்துள்ள மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு அரசுக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி, பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி ஒன்றை இந்த ஆண்டிலேயே அமைத்துத் தருமாறு மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விடுதி அமைப்பதற்குத் தேவையான, போதுமான இடம் அந்தக் கல்லூரி வளாகத்திலேயே உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்தில் 38 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மயிலாடுதுறை தொகுதியில் மட்டும் 4 விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் மயிலாடுதுறையிலேயே 3 கல்லூரி விடுதிகள்; அதாவது, அரசு பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி ஒன்றும், அரசு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ மற்றும் மாணவியர் விடுதி ஒன்றும் மற்றும் அரசு பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி 'காளி' என்ற இடத்திலும் செயல்பட்டு வருகின்றன. மேற்சொன்ன 4 விடுதிகளிலும், மொத்தம் 290 மாணவ, மாணவியர்கள் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர். மேலும், மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 725 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 18 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 32 பேரும், ஆக மொத்தம் 50 மாணவர்கள் மட்டுமே பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் கல்வியாண்டிலாவது இதுகுறித்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும்,

2018 ஜூன் 25]

மயிலாடுதுறை தொகுதியில் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் சுமார் 2,000 மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். சுமார் 400 மாணவியர்கள் மட்டுமே இந்தக் கல்லூரி விடுதியில் தங்கி கல்வி பயில்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த விடுதியில் கூடுதலாக மாணவியர்கள் தங்கி, கல்வி பயில அனுமதி வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. விதி 110—ன்கீழ் அறிக்கை

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம் அமைத்தல், சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கூடுதல் தளங்கள் கட்டுதல், கும்பகோணம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மையம் அமைத்தல், காஞ்சிபுரம், நீலகிரி மற்றும் நாகை மாவட்டங்களில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவியர் விடுதிகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர்*